## ஜார்க்கண்ட் தேர்தல்:

# இந்தியா கூட்டணி வெற்றி!

ராஞ்சி, நவ. 24 - ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா காங்கிரஸ் கட்சிகள் இடம்பெற்று இந்தியா கூட்டணி ஆட்சியை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

ஜார்க்கண்டில் மொத்தமுள்ள 81 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் கடந்த 13 மற்றும் 20ம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப் பதிவு நடைபெற்றது.

நேற்று காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கி நடைபெற்றது. மதியம் 3 மணி விவரப்படி ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா காங்கிரஸ் கூட்டணி 52 தொகுதிகளிலும், பா.ஜ.க. கூட்டணி 26 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளன. பிற கட்சிகள் 2 தொகுதிகளில் முன்னிலை வகிக்கின்றன.

முதலமைச்சர் ஹேமந்த் சோரன் பர்ஹைத் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளரை விட சுமார் 8 ஆயிரம் வாக்குகள் கூடுதலாகப் பெற்று முன்னிலை பெற்றுள்ளார். இதனிடையே, ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா காங்கிரஸ் அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணி மீண்டும் ஆட்சி அமைப்பது உறுதியாகி உள்ளது.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களுக்கு செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:


**24/11/2024 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | மீனவர் அணி துணைச் செயலாளர் அக்கரைப்பேட்டை மனோகரன் இல்லத் திருமண விழா. | வி.பி.என்.திருமண மண்டபம், நாகப்பட்டினம் |
| காலை 11:00 மணி | மாவட்டக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. | கலைஞர் அரங்கம், அவுரித் திடல், நாகப்பட்டினம். |
| மதியம் 12:00 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | ஏ.எஸ்.ஏ.திருமண மஹால், நாகப்பட்டினம். |
| மாலை 03:00 மணி | சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி. | சிக்னேச்சர் திருமண மண்டபம், மயிலாடுதுறை. |

**25/11/2024 திங்கள்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ வழங்குதல். | புனித வளனார் மேல்நிலைப்பள்ளி, கம்மியம்பேட்டை, கடலூர். |
| காலை 11:15 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | சங்கரன் சாலை, துறைமுகம், கடலூர். |
| காலை 11:45 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | எம்.எம்.எம்.திருமண மண்டபம், துறைமுகம், கடலூர். |
| மதியம் 01:00 மணி | மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் வழங்குதல். | சி.கே.பள்ளி வளாகம், கடற்கரைச் சாலை, அண்ணா நகர், கடலூர். |
| மாலை 04:30 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், கடலூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-11-2024





கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தலைமையில் உயர் கல்வித்துறை பங்களிப்போர் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. மேலும் அரசு விடுதிகளில் தங்கி உயர்கல்வி பயின்று வரும் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி மாணவ – மாணவியர்களை உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் சந்தித்து குறைகள் குறித்து கேட்டறிந்தார். இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் டாக்டர்.கே.கோபால், கல்லூரி கல்வி இயக்கக ஆணையர் சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, தொழிநுட்ப கல்வி இயக்கக ஆணையர் ஆபிரகாம், தமிழ்நாடு மாநில உயர்கல்வித் துறை துணைத் தலைவர் தம்.பி. விஜயகுமார் (ஓய்வு) மாவட்டக் கழக செயலாளர்கள் நா.கார்த்திக், தொ.அ.ரவி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர் ஆகியோர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை புரிந்த பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் விக்கிரவாண்டி சுங்கச்சாவடி அருகில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பிறகு வருகிற நவ. 29ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவிருக்கும் விழுப்புரம் ஜானகிபுரம் புறவழிச்சாலையில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களின் மணிமண்டபம் மற்றும் இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிர்நீத்த 21 தியாகிகளின் நினைவு மண்டபம் மற்றும் புதியதாக கட்டப்பட்டுள்ள எல்லீஸ் சத்திரம் அணைக்கட்டு ஆகியவற்றை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

## சேலம் உருக்காலை

# தொழிற்சங்க அங்கீகாரத் தேர்தலில் தொ.மு.ச. மாபெரும் வெற்றி!

### வாக்களித்த தொழிலாளர்களுக்கு தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. நன்றி!

சென்னை, நவ. 24 - தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சேலம் உருக்காலை தொழிற்சங்க அங்கீகாரத் தேர்தலில் தொ.முச. 273 வாக்குகள் பெற்று முதன்மை சங்கமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். வாக்களித்த அனைத்து தொழிலாளர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சேலம் உருக்காலையில் பல ஆண்டுகளாக சில சங்கங்கள் அங்கீகாரத் தேர்தலை நடத்த விடாமல் நீதிமன்ற நெடிய படிக்கட்டுகளை ஏற வைத்தும் எந்தவொரு சட்டத்திற்கும் கட்டுப்படாது தாங்கள் தான் அங்கீகார சங்கம் என்று கொக்கரித்து வந்தது. பல இடங்களில் தனக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று கேட்கும் சங்கமே சேலத்தில் தான்தான் என்றும் வேறு யாரும் வரக் கூடாது என்ற நோக்கத்தோடு அனைவரும் செயல்பட்டார்கள்.

இந்தச் சூழ்நிலையில் அரும்பாடுபட்டு தொ.மு.ச. பேரவை எடுத்த முயற்சியே. தொடர்ந்து இந்த வெற்றிக் கனியை அந்தச் சங்கம் மீட்டெடுத்து வருவதற்கு பாராட்டுக்கள்.

சேலம் உருக்காலை தனியாருக்கு தாரை வார்க்கும் போது இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் அனைத்து கட்சிகளையும் ஒருங்கிணைத்து கூட்டணியை உருவாக்கி போராட்டம் நடத்தி அதனை தனியாருக்கு செல்ல விடாமல் காப்பாற்றி வந்தார். அதனுடைய பலனாக தொழிலாளர்கள் தமிழக முதல்வர் அவர்ளை என்றும் மறக்காமல் தங்களின் நன்றிக் கடனை செலுத்தி உள்ளார்கள்.

இந்த உருக்காலை தனியாருக்கு போவதை தடுப்பதற்காக மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்கள் மாநிலங்களவையில் பல முறை குரல் கொடுத்து இதனை தக்க வைத்துள்ளார் என்பதும் தொடர்ந்து பல்வேறு போராட்டங்கள் வாயிலாக தொழிற்சாலை, தொழிற்சங்க உரிமைகளையும் காப்பாற்றி வருகின்ற தொ.மு.ச.விற்கு நம்பிக்கையோடு வாக்களித்த தொழிலாளர்களுக்கு மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தத் தேர்தலைநடத்துவதற்கு சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை அமைச்சருமான இரா.இராஜேந்திரன் சேலத்தில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து தொழிற்சங்கங்களை இணைத்து பாடுபட்டதற்கு அவர்கள் அனைவருக்கும் தொ.மு.ச. பேரவை தனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

வெற்றி பெற்ற நிர்வாகிகள் தொழிற்சாலையில் அனைவருக்குமாக பணியாற்றி தொடர்ந்து வெற்றி காண சிறப்பாக செயல்பட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் தெரிவித்துள்ளார்.



சுற்றுலாத் துறை அமைச்சருமான இரா.இராஜேந்திரன்

## கிளைக் கழகச் செயலாளர் கே.ராசேந்திரன் ஏற்பாட்டில்

# திண்டிவனம் நகரம் 14வது வார்டில் முரசொலி மாறன் நினைவு நாள்!

### கோ.அசோகன் தலைமை! சீனி சின்னசாமி - வி.எஸ்.முருகன் - சின்னா கே.ராஜேந்திரன் பங்கேற்பு!

விழுப்புரம், நவ. 24- திண்டிவனம் நகரம், 14 வது வார்டு தி.மு.க. சார்பில் கிளைக் கழகச் செயலாளர் கே.ராசேந்திரன் ஏற்பாட்டில் கலைஞரின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் 21ஆம் ஆண்டு நினைவு நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழுப்புரம் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் வழக்கறிஞர் கோ.அசோகன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனி சின்னசாமி எம்.சி, மாவட்ட பிரதிநிதி வி.எஸ்.முருகன், நகர கழகப் பொருளாளர் சின்னா கே. ராஜேந்திரன், மாவட்ட பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் எம்.குப்புசாமி, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி.ராஜேஷ், வழக்கறிஞர்கள் கோ.சேகர், பனையூர் டி.மோகனசுந்தரம், ஈ.செந்தில்வேல், பி.வேலாயுதம், க.விஜயகுமார், கிளாசிக் ரமேஷ், எஸ்.பழநி, எம்.கண்ணதாசன், ஜி.முருகானந்தம், என்.வீரராகவன், எத்திராஜ், கோவிந்தாபுரம் சீத்தாராமன், எஸ். சிவப்பிரகாசம், மேஸ்திரி என்.ராஜேந்திரன், கே.கே. தாஸ், எஸ்.வேதமூர்த்தி, த. சீனுஎசன், ராஜேஷ், அரும்பு குணசேகரன் எம்.சி. மற்றும் பலர் கலந்து கொண்டு செஞ்சி சாலையில் நிறுவப்பட்டிருந்த முரசொலி மாறன் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.ராசேந்திரன் செய்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. குமரேசன்

நவம்பர் 24 (2006)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, ஆர்.கே.நகர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

17வது வட்டக் கழகச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் – பகுதி செயலாளராகவும், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

வண்ணாரப்பேட்டை பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், நாம்கோ இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

1962 – விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.